# APTET – May 2018

## PAPER – II (A) SOCIAL STUDIES (TAMIL)

1. Establishing foundation for complex social life by developing relations with outside world is the prime aspect of this stage

   1. Infancy
   2. Early child hood
   3. Late child hood
   4. School age

   புற உலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு சிக்கலான சமூக வாழ்க்கைக்கு அடிக்கல் நாட்டுதல் இந்த படிநிலையின் முக்கியக்கூறு

   1. குழவிப் பருவம்
   2. முன்பிள்ளைப் பருவம்
   3. பின்பிள்ளைப் பருவம்
   4. பள்ளிப் பருவம்

2. An English word ‘Motivation’ is originated from a Greek word ‘Movere’. Movere means

1. Tension
2. Drive
3. Motion
4. Motivation

‘Motivation’ என்றும் ஆங்கிலச் சொல் கிரேக்கச் சொல்லான ‘Movere’ என்பதிலிருந்து தோன்றியது. அதன் பொருள்

1. பதற்றம்
2. உந்தல்
3. சலனம்
4. ஊக்கம்

3. Individual accountability is seen in this type of learning.

1. Collaborative learning
2. Observational learning
3. Co-operative learning
4. Conditional learning

தனியாள் பொறுப்பு வகித்தல் என்பது இவ்வகைக் கற்றலில் காணப்படுகிறது

1. ஈடுபாட்டுக் கற்றல்
2. உற்றுநோக்கிக் கற்றல்
3. ஒத்துழைத்துக் கற்றல்
4. நிலையிறுத்தக் கற்றல்

4. Higher order objective in the affective domain is

1. Responding
2. Valuing
3. Receiving
4. Characterisation

உணர்ச்சிசார் களத்தின் உயர் ஒழுங்கு குறிக்கோளானது

1. துலங்கல்
2. மதிப்பிடுதல்
3. பெறுதல்
4. பண்பு உருவாக்கம்

5. The counselling in which counselee can find out the solution for his problem by analyzing it with the help of counsellor

1. Directive counselling
2. Non-Directive counselling
3. Eclectic counselling
4. Personal counselling

அறிவுறுத்தப்படுபவர் அறிவுறுத்துபவரின் உதவியால் தன் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலும் அறிவுரை பகர்தல் முறை

1. வழிகாட்டுதல் அறிவுரை பகர்தல்
2. வழிகாட்டா அறிவுரை பகர்தல்
3. பன்முக அறிவுரை பகர்தல்
4. தனியாள் அறிவுரை பகர்தல்

6. In experimental method, the variable which is under the control of experimenter is

   1. Independent variable
   2. Dependent variable
   3. Intervening variable
   4. Experimental variable

   பரிசோதனை முறையில் பரிசோதகரின் கட்டுப்பாட்டில் உள்ள மாறி

   1. தனித்தியங்கும் மாறி
   2. சார்பு மாறி
   3. குறுக்கீட்டு மாறி
   4. பரிசோதனை மாறி

7. Sometimes old things facilitates the learning of new things, the reason is

   1. Transfer of learning
   2. Pro-active inhibition
   3. Retroactive inhibition
   4. Pygmalion effect

   சில வேளைகளில் பழைய தகவல்கள்/பாடப் பொருள்கள் புதிய பாடப் பொருள்களை கற்பதில் துணைபுரிகின்றன. இதற்கு காரணம்

   1. கற்றல் மாற்றம்
   2. முன் செயலீட்டுத் தடை
   3. பின் செயலீட்டுத் தடை
   4. பிக்மேலியனின் விளைவு

8. A person attained good personality by developing socially accepted values is his

   1. Mental development
   2. Emotional development
   3. Moral development
   4. Social development

   ஒரு மனிதன் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் மதிப்புகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் நல்ல ஆளுமையைப் பெறுகிறான் என்பது அவனுடைய

   1. மன வளர்ச்சி
   2. மனவெழுச்சி வளர்ச்சி
   3. அறநெறி வளர்ச்சி
   4. சமூக வளர்ச்சி

9. The correct sequence of 'Process of Memory'

   1. Retention → Encoding → Retrieval
   2. Retention → Retrieval → Encoding
   3. Encoding → Retrieval → Retention
   4. Encoding → Retention → Retrieval

   நினைவுச் செயற்பாடு நடைபெறும் சரியான வரிசை

   1. மனத்திருத்துதல்→குறியாக்கம்→மீட்டுக்கொணர்தல்
   2. மனத்திருத்துதல்→மீட்டுக்கொணர்தல்→குறியாக்கம்
   3. குறியாக்கம்→மீட்டுக்கொணர்தல்→மனத்திருத்துதல்
   4. குறியாக்கம் →மனத்திருத்துதல்→மீட்டுக்கொணர்தல்

10. Latha is doing a science experiment. Teacher is giving reinforcement once in every five minutes, here the Reinforcement schedule is

1. Fixed Ratio Reinforcement
2. Fixed Interval Reinforcement
3. Continuous Reinforcement
4. Variable Reinforcement

லதா அறிவியல் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறாள். ஆசிரியர் ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை வலுவூட்டியைத் தருகிறார். இங்கு பயன்படும் வலுவூட்டி

1. நிலை விகித வலுவூட்டி
2. நிலையான காலஇடைவெளி வலுவூட்டி
3. தொடர்ச்சியான வலுவூட்டி
4. மாறி வலுவூட்டி

11. At first child uses his hand to hold the things, later he manages to hold them with his fingers. The developmental principle here is

1. Development is the process of interaction
2. Development follows uniformity of pattern
3. Development is cumulative
4. Development proceeds from general to specific

குழந்தை முதலில் பொருட்களைப் பிடித்துக்கொள்ள தன் கையை பயன்படுத்துகிறது. பின்னர் தன் கைவிரல்களால் பிடித்துக்கொள்ள முடிவதில் உள்ள வளர்ச்சி விதிமுறை

1. வளர்ச்சியானது இடைவினைச் செயற்பாடு
2. வளர்ச்சியானது ஒரு சீரான முறையை பின்பற்றுகிறது
3. வளர்ச்சியானது திரளக்கூடியது
4. வளர்ச்சியானது பொதுவிலிருந்து சிறப்பை நோக்கி செயல்படுகிறது

12. Abnormal forgetting caused by mental trauma and physical trauma is called

1. Amnesia
2. Fuge
3. Deja vu
4. Repression

மன மற்றும் உடல் சார்ந்த அதிர்ச்சிகளால் ஏற்படும் அசாதாரண மறதியை இவ்வாறு அழைப்பர்

1. நினைவிழப்பு (Amnesia)
2. நினைவிழப்பு வாழ்க்கை (Fuge)
3. டெஜா வூ
4. நசுக்குதல்

13. The percentage of marks allotted for slip test in formative evaluation is

வளர்நிலை மதிப்பீட்டில் சிறுதேர்விற்கு ஒதுக்கப்படும் மதிப்பெண் சதவீதம்

1. 10%
2. 40%
3. 20%
4. 50%

14. 'Fading' is the method used to

1. Enrich gifted children
2. Make to read partially visually handicapped
3. Improve the behavior of mentally retarded
4. Make deaf & dumb to communicate with sign language

படிப்படியாக மறைதல் என்னும் முறையை இதற்கு பயன்படுத்துவர்

1. மீத்திறன் குழந்தைகளை வளமாக்க
2. குறைவாக பார்வைக் குறைபாடுள்ளவர்களை படிக்கவைக்க
3. மனநலம் குன்றியவர்களின் நடத்தையை மேம்படுத்துவதில்
4. சைகை மொழியில் செவிடு மற்றும் ஊமைகளைத் தகவல் தொடர்பு செய்யவைப்பதில்

15. According to RTE Act - 2009, the classes in Elementary Education are

1. Nursery to 5th class
2. 1st to 8th class
3. 1st to 5th class
4. Nursery to 8th class

கல்வி உரிமைச் சட்டம்-2009ன்படி Elementary Education-ல் இருக்கம் வகுப்புகள்

1. முன் துவக்கம் முதல் 5ஆம் வகுப்பு வரை
2. முதலாம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை
3. முதலாம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை
4. முன் துவக்கம் முதல் 8ஆம் வகுப்பு வரை

16. The socio-cultural factor that affects human development is

1. Religious rituals
2. Food
3. Environment in which person grows
4. Accommodation

மனித வளர்ச்சியை பாதிக்கும் சமூக கலாச்சாரக் காரணி

1. மதச் சடங்குகள்
2. உணவு
3. மனிதன் வளரும் சுற்றுச்சூழல்
4. வசதிகள்

17. Learner's mental aspect which affects learning is

1. Innate abilities
2. Age
3. Gender difference
4. Health

கற்றலைப் பாதிக்கும் கற்பவரின் மனக் கூறு

1. உள்ளார்ந்த திறன்கள்
2. வயது
3. பாலின வேற்றுமை
4. உடல்நலம்

18. The theory proposed by Carl Rogers is

1. Psycho analytic theory
2. Theory of Hierarchy of needs
3. Experiential learning theory
4. Observational learning theory

கார்ல் ரோஜர்ஸால் முன்மொழியப்பட்ட கோட்பாடு

1. உளப் பகுப்பாய்வுக் கோட்பாடு
2. தேவைகளின் படித்தளக் கோட்பாடு
3. அனுபவக் கற்றல் கோட்பாடு
4. உற்றுநோக்கிக் கற்றல் கோட்பாடு

19. A person rattles the box of dog's biscuits before giving the biscuits to dog. After some period, when the person rattles the box the dog begins to salivate. Here rattling of box is a kind of

1. Conditioned response
2. Conditioned stimulus
3. Unconditioned response
4. Unconditioned stimulus

ஒரு மனிதன் நாய்க்கு பிஸ்கட்டுகளை தருவதற்கு முன் பிஸ்கட் பெட்டியை ஒலிவரும்படி திருப்புகிறான். சிறிது நேரம் கழித்து அந்த மனிதன் பெட்டியை திருப்ப ஆரம்பித்தவுடன் அது உமிழ்நீர் சுரக்க ஆரம்பிக்கிறது. இங்கு பெட்டியைத் திருப்புதல் என்பது ஒரு வகையான

1. நிலையிறுத்தத் தூண்டல்
2. நிலையிறுத்தத் துலங்கல்
3. நிலையிறுத்தா தூண்டல்
4. நிலையிறுத்தா துலங்கல்

20. The concept of ‘Object Permanence’ occurs in this stage of Piaget’s cognitive development

1. Formal operational stage
2. Concrete operational stage
3. Sensory motor stage
4. Pre operational stage

பொருள் நிலைக்கருத்து ஏற்படும் பியாஜேவின் அறிவுசார் வளர்ச்சிப் படிநிலை

1. இயல் செயல்பாட்டு நிலை
2. பருச் செயற்பாட்டு நிலை
3. புலனியக்க நிலை
4. முன்செயற்பாட்டு நிலை

21. One type of individual learning is

1. Project work
2. Brain storming
3. Seminars
4. Computer based learning

தனியாள் கற்றலின் வகை

1. செயல்திட்டப் பணி
2. அறிவுச் சிந்தனை
3. கருத்தரங்கு
4. கணினி அடிப்படையிலான கற்றல்

22. According to Erickson, providing adequate training, sufficient education and good models to the children of age group between 6 to 12 years develops this feature in them

1. Industriousness
2. Initiative
3. Identity
4. Autonomy

எரிக்சனின் கருத்துப்படி 6 முதல் 12 வயது நிரம்பிய குழந்தைகளுக்கு சரியான பயிற்சி, தகுந்த கல்வி மற்றும் மாதிரிகளை வழங்குவதால் அவர்களில் இப்பண்பினை வளர்க்கலாம்

1. சுறுசுறுப்புத் தன்மை
2. தொடங்கும் திறன்
3. அங்கீகாரம்
4. தன்னதிகாரம்

23. The defence mechanism in which we attribute our undesirable qualities to others is called

1. Identification
2. Projection
3. Displacement
4. Regression

நம்மிடமுள்ள விரும்பத் தகாத பண்புகளை பிறர் மீது சுமத்துவதில் அடங்கியுள்ள தற்காப்புச் செயல்

1. ஈடுசெய்தல்
2. ஏற்றுதல்
3. இடப்பெயர்ச்சி
4. பின்னடைவு

24. Social learning is also called

1. Learning through conditioning
2. Trail and error learning
3. Learning through imitation
4. Insightful learning

சமுதாயக் கற்றலை இவ்வாறும் அழைக்கலாம்

1. நிலையிறுத்துதல் மூலம் கற்றல்
2. முயன்று தவறிக் கற்றல்
3. போலச் செய்தல் மூலம் கற்றல்
4. அகக்காட்சி மூலம் கற்றல்

25. The moral developmental stage in which, behaviour of the children is controlled by the rewards they secure

1. Authority and social order maintaining morality
2. Good boy morality
3. Obedience and punishment orientation
4. Naive hedonistic and instrumental orientation

குழந்தைகளின் நடத்தை அவர்கள் பெறும் பரிசுகளால் கட்டுப்படுத்தப்படும் அறநெறி வளர்ச்சி படிநிலை

1. அதிகாரம் மற்றும் சமூக ஒழுங்கு – அறநெறியை நிர்வகித்தல்
2. நற்சிறுவன் அறநெறி
3. கீழ்ப்படிதல் மற்றும் தண்டனை சார்ந்தது
4. இயல்பான மகிழ்ச்சிகரமான மற்றும் கற்பித்தலை சார்ந்தது

26. Choose the odd one from the following.

1. Experimental method
2. Lecture method
3. Activity method
4. Project method

கீழ்க்கண்டவற்றில் பொருந்தாததைத் தேர்ந்தெடு

1. பரிசோதனை முறை
2. விரிவுரை முறை
3. செயலடிப்படை முறை
4. செயல்திட்ட முறை

27. The intelligence possessed by "self smart" is

1. Interpersonal intelligence
2. Visual spatial intelligence
3. Intrapersonal intelligence
4. Bodily kinaesthetic intelligence

சுயத் திறமைகளைக் கொண்டிருக்கும் நுண்ணறிவு

1. மனிதர்களுக்கிடையிலான நுண்ணறிவு
2. காட்சி இட நுண்ணறிவு
3. மனிதர்களுக்குள்ளார்ந்த நுண்ணறிவு
4. உடல் தொடு உணர்வுசார் நுண்ணறிவு

28. A plan prepared keeping in view of the lessons to be taught month wise in an academic year is called

1. Unit plan
2. Year plan
3. Period plan
4. Classroom plan

ஒரு கல்வியாண்டில் மாதந்தோறும் முடிக்கவேண்டிய பாடக் கருத்துகளை மனதிற்கொண்டு தயாரிக்கும் திட்டம்

1. அலகு திட்டம்
2. ஆண்டு திட்டம்
3. பிரிவேளைத் திட்டம்
4. வகுப்பறைத் திட்டம்

29. The pituitary gland is called as master endocrine gland because

1. It is located in the central nervous system
2. It controls the amount of body growth
3. It regulates the activities of other endocrine glands
4. It is responsible for the functioning of autonomous nervous system

பிட்யூட்டரி சுரப்பி நாளமில்லா சுரப்பிகளின் தலைவன் என அழைக்கப்படுவதன் காரணம்

1. அது மைய நரம்பு மண்டலத்தில் அமைந்துள்ளது
2. அது உடல் வளர்ச்சியின் அளவைக் கட்டுப்படுத்துகிறது
3. அது பிற சுரப்பிகளின் செயற்பாடுகளை சீரமைக்கிறது
4. அது தானியங்கு நரம்பு மண்டலத்தின் பணிக்குப் பொறுப்பு வகிக்கிறது

30. The difference between learning with or without the support of others by a child is called

1. Zone of proximal development
2. Social scaffolding
3. Instructional scaffolding
4. Knowledge construction

ஒரு மாணவன் பிறரின் உதவியுடனோ அல்லது பிறரின் உதவியின்றியோ கற்றுக்கொள்வதற்கு இடையிலான வேறுபாட்டை இவ்வாறு அழைப்பர்

1. அணுக்க வளர்ச்சி மண்டலம்
2. சமூக ஆதரவு
3. கற்பித்தல் ஆதரவு
4. அறிவு உருவாக்கம்

31. கற்பிப்போர் கண்கொடுப் போரே! அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! – நாளும்
நன்றாக படித்துநீ முன்னேற வேண்டும்!
- இப்பாடல் இடம்பெறும் தலைப்பு

1. பள்ளிக்கு ஓடி வா
2. படிக்க வேண்டும்
3. மெய்ப்பொருள் கல்வி
4. வாழ்க்கை

32. வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர்

1. கடுவெளிச் சித்தர்
2. வெ. இராமலிங்கனார்
3. தாயுமானவர்
4. தேசிக சுவாமி

33. ‘ தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்...’ எனும் முக்கூடற்பள்ளு பாடல் வலியுறுத்தும் கருத்து

1. கடல்வளம்
2. கிராமவளம்
3. நதிவளம்
4. நகர்வளம்

34. தென்னிந்தியாவின் ஏதென்ஸ் எனப்படுவது

1. சென்னை
2. மதுரை
3. கோவை
4. தஞ்சாவூர்

35. தமிழில் தோன்றிய முதல் அகராதி

1. சதுரகராதி
2. தமிழ்ச் சொல்லகராதி
3. தமிழ் அகராதி
4. பல்கலைக்கழக அகராதி

36. சங்க காலத்திலேயே ஓட்டுநர் இல்லா வானவூர்தி இருந்ததாக இந்நூல் குறிப்பிடுகிறது

1. பரிபாடல்
2. புறநானூறு
3. அகநானூறு
4. பதிற்றுப்பத்து

37. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் புறநானூறு வரியைப் பாடியவர்

1. கழைதின் யானையார்
2. மருதன் இளநாகனார்
3. கணியன் பூங்குன்றன்
4. திருமூலர்

38. சேர்ந்த புறாவின் நிறைதன் திருமேனி
ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் – இப்பாடல், இம்மன்னனின் கொடைத் திறத்தை வெளிப்படுத்துகிறது

1. பல்லவன்
2. பாண்டியன்
3. சேரன்
4. சோழன்

39. ‘ வினையே ஆடவர்க்குயிர்’ என்று கூறும் நூல்

1. நெடுந்தொகை
2. நெடுநெல்வாடை
3. கலித்தொகை
4. குறுந்தொகை

40. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருநாவுக்கரசர் பாடி அருளிய பாடல்கள் இத் திருமுறையில் அடங்கும்.

1. நான்கு, ஐந்து, ஆறு
2. ஒன்று, இரண்டு, மூன்று
3. மூன்று, நான்கு, ஐந்து
4. ஐந்து, ஆறு, ஏழு

41. ‘ புரவி’ என்பதன் பொருள்

1. கரடி
2. யானை
3. குதிரை
4. பசு

42. ‘ நெருப்பு ’ எனும் பொருள் தரும் பலசொற்கள்

1. தீ, வெற்பு, தனல்
2. அனல், கனல், தீ
3. தீ, புனல், கனல்
4. தீ, வெற்பு, பொருப்பு

43. ‘மெய்’ என்பதன் இருபொருள்

1. உண்மை, மரம்

2. உண்மை, உடல்

3. உண்மை, கடல்

4. உண்மை, மான்

44. ‘ பெருங்குணம்’ இச்சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு

1. பண்புத்தொகை

2. உம்மைத்தொகை

3. வினைத்தொகை

4. உவமைத்தொகை

45. ‘ வாய்க்கால்’ என்பது இவ்வகை வழக்காகும்

1. இலக்கணமுடையது

2. மங்கலம்

3. மரூஉ

4. இலக்கணப்போலி

46. ‘ சிங்கம் கனைத்தது’ என்பது இவ்வழு ஆகும்

1. திணை வழு
2. பால் வழு
3. மரபு வழு
4. கால வழு

47. ‘முத்தமிழ்’ இத் தொகைச் சொல்லை விரித்துக் காண்

1. சிறப்புத்தமிழ், இலக்கியத்தமிழ், இலக்கணத்தமிழ்
2. தன்மை, முன்னிலை, படர்க்கை
3. அறம், பொருள், இன்பம்
4. இயல், இசை, நாடகம்

48. ‘நிபுணர்’ இப்பிறமொழிச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல்

1. வல்லுநர்
2. கருவூலர்
3. அயலார்
4. அலுவலர்

49. ‘ ஆயிரங் காலத்துப் பயிர்’ – இம்மரபுத் தொடருக்குப் பொருள்

1. இடத்துக்குத் தக நடத்தல்

2. நீண்ட காலத்திற்குரியது

3. பட்டறிவில்லாத படிப்பறிவு

4. எண்ணமும் செயலும் ஒத்துவராமை

50. ‘ நாள்தோறும் உடற்பயிற்சி செய்’ என்பது இவ்வகைத் தொடராகும்

1. எதிர்மறைத் தொடர்

2. உணர்ச்சித் தொடர்

3. கட்டளைத் தொடர்

4. வினாத்தொடர்

51. ‘ஆசிரியர் பாடத்தை நடத்தினார்’ இச் செய்வினைத் தொடர் செயப்பாட்டு வினைத்தொடராக இவ்வாறு மாறும்.

1. ஆசிரியர் பாடம் நடத்தினார்

2. ஆசிரியர் நடத்தினார் பாடம்

3. பாடத்தை ஆசிரியரால் நடத்தப்பட்டது

4. பாடம் ஆசிரியரால் நடத்தப்பட்டது

52. கல் + சிலை என்பது இவ்வகைப் புணர்ச்சியாகும்

1. தோன்றல் விகாரப் புணர்ச்சி

2. திரிதல் விகாரப் புணர்ச்சி

3. இயல்புப் புணர்ச்சி

4. கெடுதல் விகாரப் புணர்ச்சி

53. புலவன், தான் கருதிய பொருளை நேரடியாகச் சொல்லாமல் அதனோடு தொடர்பு உடையனவற்றைச் சொல்லி விளங்க வைப்பது

1. வேற்றுமை அணி
2. நிரல் நிரை அணி
3. பிறிது மொழிதல் அணி
4. எடுத்துக்காட்டு உவமை அணி

54. ‘ இருளறுக்கும்’ இச் சீரில் அமைந்துள்ள அசைகள்

1. நேர், நேர், நிரை
2. நிரை, நிரை, நேர்
3. நேர், நிரை, நேர்
4. நிரை, நேர், நிரை

55. வெண்பாவின் வகைகள்

1. இரண்டு
2. நான்கு
3. ஐந்து
4. ஆறு

56. ஒருவர் பேசியதை அவர் பேசியபடியே கூறுவது, இத் தொடரின் இயல்பாகும்

1. நேர்க்கூற்றுத் தொடர்
2. அயற்கூற்றுத் தொடர்
3. தனிநிலைத் தொடர்
4. தொடர்நிலைத் தொடர்

கீழ்க்காணும் பத்தியை படித்து 57, 58 வினாக்களுக்கு விடையளி.

மொழி பேச்சு மொழியாக மட்டும் இருந்த போது, மக்கள் மற்ற உயிர்களைவிடச் சில படிகள் முன்னேறியவராக வாழ்ந்தனர். பேச்சு மொழியை எழுதத் தொடங்கி எழுத்துமொழியைப் படைத்தவுடன் மக்களின் வாழ்வு பல படிகள் முன்னேறியது. அச்சுப்பொறி வந்தவுடன் அந்த முன்னேற்றம் விரைவுடையதாயிற்று. எழுத்துமொழி ஆற்றல் மிகுந்ததாக வளர்ந்துவிட்டது. மனிதனால் கடக்க முடியாத இடத்தையும் காலத்தையும் கடந்து வாழும் ஆற்றலை மொழி பெற்றுவிட்டது. மனிதனால் வெல்ல முடியாத மரணத்தை–அழிவை–மொழி வென்றுவிட்டது.

57. மனிதனால் வெல்ல முடியாதது

1. கலை
2. மரணம்
3. ஆராய்ச்சி
4. செயல்

58. மனிதனால் கடக்க முடியாத இடத்தையும், காலத்தையும், ஆற்றலையும் இது பெற்றுவிட்டது.

1. அறிவு
2. அச்சுப்பொறி
3. மொழி
4. வாழ்வு

கீழ்க்காணும் பாடலைப் படித்து 59, 60 வினாக்களுக்கு விடையளி

அன்பு வளர்ந்தால் அலைகடல்சூழ் நம்நாட்டில்
துன்பம் இல்லை! தொழிலாளி செல்வனென்ற
வம்பில்லை! தாழ்வுயர்வுச் சாதி மலிவதில்லை!

59. நம் நாட்டில், இது வளர்ந்தால் துன்பமில்லை

1. அன்பு
2. வேலைவாய்ப்பு
3. சாதி
4. செல்வம்

60. ‘தாழ்வு’ என்பதன் எதிர்ச்சொல்

1. துன்பம்
2. செல்வம்
3. தொழிலாளி
4. உயர்வு

61. Mohan is less confident than his peer in his office.

Choose the meaning of ‘peer’ in the given context.

1. A person with a high rank
2. A person with noble ideas
3. A person of equal rank
4. A person who works hard

62. Murthy is a philanthropist.

This sentence says that Murthy:

1. devotes his service or wealth for the love of mankind
2. writes the life histories of famous people
3. abstains from taking alcohol
4. hates the people who spends too much

63. Choose the suffix that can be used to make the past form of the verb ‘learn’.

1. -t
2. -or
3. -er
4. -ism

64. Choose the word with wrong spelling.

1. quite
2. exasperatedly
3. vacation
4. terribley

65. Choose the sentence in which the word, 'fair' is used as a noun.

1. She is not fair in this issue.
2. She is a fair lady.
3. She visited a fair yesterday.
4. She received a fair share of property from her father.

66. Raman was mainly <u>interested</u> in acoustics.

Choose the antonym of the word 'interested'.

1. Uninterested
2. Misinterested
3. Noninterested
4. Ininterested

67. The car <u>broke down</u> in the forest.

Choose the meaning of the phrasal verb ‘ broke down’.

1. Started making noise
2. Stopped working
3. Started moving fast
4. Failed to stop

68. Who knows what might happen.

‘Might’ in the above sentence is used to express:

1. purpose
2. uncertainty
3. gentle approach
4. obligation

69. How can we forget ……………. immortal Shakespeare.

Choose the correct article to fill in the blank.

1. a
2. an
3. the
4. no article is needed

70. He is confined ………… bed.

Choose the correct preposition that fits the blank.

1. with
2. to
3. in
4. on

71. He is not what he pretends to be.

In this sentence, the noun clause is used:

1. as the object of an action verb
2. as the subject of the sentence
3. as the complement of the verb ‘be’.
4. as the object of a preposition

72. Choose the sentence that can be used in an informal situation.

1. What is your name?
2. May I know your name?
3. Will you please tell me your name?
4. Please tell me your name.

73. After all, this time you’d think that.

Choose the correct question tag for this sentence.

1. did you ?
2. aren’t you ?
3. didn’t you ?
4. wouldn’t you ?

74. Choose the negative sentence from the following

1. She never drinks milk.
2. I have made it.
3. She will do this work.
4. Why are you late ?

75. Ram said to Sita, ‘ I like swimming.’

Choose the reported speech of the sentence above.

1. Ram said that Sita liked swimming.
2. Ram asked Sita if she liked swimming.
3. Ram told to Sita that he likes swimming.
4. Ram told Sita that he liked swimming.

76. One of the pupils in our class ………… a car.

Choose the correct form of verb that fits the blank.

1. own
2. owns
3. owning
4. have own

77. Listen ! Someone ………… the flute.

Choose the correct tense form that fits the blank.

1. has been play
2. is played
3. is playing
4. has played

78. I am ashamed to be <u>dirty</u>.

The part of speech of the word ‘dirty’ is:

1. an adverb
2. an adjective
3. a verb
4. a conjunction

79. Choose the linker that can be used to indicate similarity.

1. On the contrary
2. Still
3. In the same way
4. However

80. The magician made a flower. He used colourful papers.

These two sentences can be combined meaningfully as:

1. The magician made colourful papers to make a flower.
2. The magician made a flower and colourful papers.
3. The magician made a flower with colourful papers.
4. The colourful papers made a flower magically.

81. Choose the grammatically correct sentence from the following.

1. Naresh does not believe in God.
2. Naresh does not believed in God.
3. Naresh is not believing in the God.
4. Naresh does not believe in the God.

82. An interrogative sentence ends with:

1. a full stop
2. a question mark
3. an exclamatory mark
4. a comma

83. The comma is used:

1. to separate two or more words of the same parts of speech that come together
2. to end a sentence in past tense
3. to mark a quotation
4. to end an interrogative sentence

84. Choose the verb in passive voice from the following.

1. inspect
2. inspects
3. inspected
4. was inspected

85. Rahul Dravid was ………… batsmen in the World.

Choose the correct expression that fits the blank.

1. one of the greater
2. one of the greatest
3. greater than
4. as great as

86. When we want to share our feelings with our friends, we choose to write:

1. a poster
2. a diary
3. a news report
4. a letter

87. Choose the list of words in correct alphabetical order.

1. one, two, three, four
2. four, one, three, two
3. two, one, four, three
4. four, three, two, one

88. The floods <u>inundated</u> their houses.

Choose the synonym of the word 'inundated'.

1. submerged
2. saved
3. searched
4. opened

89. Read the following passage and answer the question.

In his old age, Tyagaraja set out on a pilgrimage. He went to Tirupathi to have '*darshan*' of Lord Venkateswara. In the temple he saw a curtain in front of the image of the Lord. He could not see the Lord's image. Then he sang a song expressing a strong desire to see the Lord. As he sang, the curtain parted and he had '*darshan*' of the Lord.

This passage says that;

1. Tyagaraja belonged to Tirupathi.
2. Only old people go to Tirupathi.
3. Tyagaraja visited Tirupathi on his pilgrimage.
4. Lord Venkateswara was on his pilgrimage.

90. Read the following passage and answer the question.

In his old age, Tyagaraja set out on a pilgrimage. He went to Tirupathi to have '*darshan*' of Lord Venkateswara. In the temple he saw a curtain in front of the image of the Lord. He could not see the Lord's image. Then he sang a song expressing a strong desire to see the Lord. As he sang, the curtain parted and he had '*darshan*' of the Lord.

Tyagaraja has 'darshan' of the Lord:

1. by removing the curtain with his hands
2. by praying to Lord with a song
3. by closing his eyes
4. by opening the door with his hands

91. The two ends of the axis of the Earth are called

1. Longitudes
2. Countries
3. Continents
4. Poles

பூமி அச்சின் இரண்டு முனைப் பகுதிகள்

1. தீர்க்க கோடுகள்
2. நாடுகள்
3. கண்டங்கள்
4. துருவங்கள்

92. Partners in contract farming are

1. Farmers and officials
2. Farmers and banks
3. Farmers and companies
4. Farmers and government

ஒப்பந்த விவசாயத்தில் பங்குதாரர்கள்

1. விவசாயிகள் மற்றும் அதிகாரிகள்
2. விவசாயிகள் மற்றும் வங்கிகள்
3. விவசாயிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள்
4. விவசாயிகள் மற்றும் அரசாங்கம்

93. Form of the Government in “Vajji Mahajanapadam” is

1. Authoritarian Government
2. Anarchic Government
3. Monarchy
4. Gana form of Government

வஜ்ஜி மகாஜனபதத்தின் அரசாங்க முறை

1. அடக்குமுறை அரசாங்கம்
2. அராஜக அரசாங்கம்
3. மன்னராட்சி
4. கனா அரசாங்க முறை

94. ‘Megaliths’ are -

1. Temples
2. Burial sites
3. Stupas
4. Viharas

மெகாலித்கள் எனப்படுபவை

1. கோவில்கள்
2. சமாதிகள்
3. ஸ்தூபங்கள்
4. விஹாராக்கள்

95. The songs composed and sung by Alwars are

1. Pasurams
2. Light music
3. Folk songs
4. Shlokas

ஆழ்வார்களால் இயற்றப்பட்டு, பாடப்பட்ட பாடல்கள்

1. பாசுரங்கள்
2. மெல்லிசை
3. நாட்டுப்புற பாடல்கள்
4. சுலோகங்கள்

96. First Kavya in Sanskrit literature

1. Ramayana
2. Mahabharatha
3. Bhagavatham
4. Shakuntalam

சமஸ்கிருத இலக்கியத்தில் முதலாவது காவியம்

1. இராமாயணம்
2. மகாபாரதம்
3. பாகவதம்
4. சாகுந்தலம்

97. The rhythmic rise and fall in the level of the water in the oceans every day is known as

1. Waves
2. Floods
3. Currents
4. Tides

பெருங்கடன் புறப்பரப்பில் உள்ள நீர், தினந்தோறும் முறையாக எழுவதையும், வீழ்வதையும் இவ்வாறு அழைப்பர்

1. அலைகள்
2. வெள்ளப்பெருக்கு
3. நீரோட்டங்கள்
4. ஏற்றவற்றங்கள்

98. Industrial Revolution started in this Country.

1. England
2. America
3. Russia
4. India

தொழிற்புரட்சி முதல் இந்த நாட்டில் துவங்கியது

1. இங்கிலாந்து
2. அமெரிக்கா
3. ரஷ்யா
4. இந்தியா

99. These Kings were called as “Andhra Rajas’

1. Vishnu Kundins
2. Pallavas
3. Cholas
4. Kakatiyas

ஆந்திர மன்னர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள்

1. விஷ்ணு குண்டின்கள்
2. பல்லவர்கள்
3. சோழர்கள்
4. காகதீயர்கள்

100. ‘Zabt’ tax was introduced by this minister in Akbar’s Court

1. Thodarmal
2. Abul Fazal
3. Birbal
4. Sangrama Singh

அக்பர் ஆட்சியில் ‘ஜப்த்’ வரியை அறிமுகப்படுத்திய அமைச்சர்

1. தோடர்மால்
2. அபுல் பஜல்
3. பீர்பால்
4. சங்க்ராம சிங்

101. Minimum age limit for right to vote in our country.

1. 21 years
2. 19 years
3. 20 years
4. 18 years

நம் நாட்டில் வாக்களிக்க தேவையான குறைந்தபட்ச வயது தகுதி

1. 21 ஆண்டுகள்
2. 19 ஆண்டுகள்
3. 20 ஆண்டுகள்
4. 18 ஆண்டுகள்

102. 'Palanati Virula Kadha' was written by

1. Nannayya
2. Thikkana
3. Mulla
4. Sreenadha

'பலநாட்டி வீருல கதா' என்னும் நூலை எழுதியவர்

1. நன்னய்யா
2. திக்கனா
3. முல்லா
4. ஸ்ரீநாதர்

103. Andhra Janasangham was formed by

1. Madapati Hanumantha Rao
2. Komarraju Lakshmana Rao
3. Nayani Venkata Ranga Rao
4. Ravichettu Ranga Rao

ஆந்திர ஜனசங்கத்தை நிறுவியவர்

1. மாடபாட்டி அனுமந்தராவ்
2. கோமராஜு லட்சுமணராவ்
3. நாயணி வெங்கடரங்காராவ்
4. ராவி செட்டு ரங்காராவ்

104. Quit India movement was started in the year

'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' துவங்கபட்ட ஆண்டு

1. 1943
2. 1946
3. 1942
4. 1941

105. Madapati Hanumantha Rao, Ravi Narayana Reddy were associated with

1. Andhra Mahila Sabha
2. Andhra Saraswatha Sabha
3. Andhra Bhasha Sangam
4. Andhra Maha Sabha

மாடபாட்டி அனுமந்த ராவ் மற்றும் ராவி நாராயண ரெட்டி இதனுடன் தொடர்பு கொண்டவர்கள்

1. ஆந்திர மகிளா சபா
2. ஆந்திர சாரஸ்வத சபா
3. ஆந்திர பாஷா சங்கம்
4. ஆந்திர மகா சபை

106. Even before independence a law was made in this year on abolition of the forced labour or vetti

சுதந்திரத்திற்கு முன்பே வெட்டி அல்லது கொத்தடிமை முறையை ஒழிக்க, சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

1. 1927
2. 1937
3. 1947
4. 1917

107. The United Nations Organization was established in the year

ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு

1. 1943
2. 1945
3. 1944
4. 1946

108. The first woman teacher in India

1. Savithri Bai Phule
2. Pandit Ramabai Saraswathi
3. Tarabai Shinde
4. Begum Rokiya Sakhawat Hussain

இந்தியாவின் முதலாவது பெண் ஆசிரியை

1. சாவித்திரிபாய் பியூலே
2. பண்டிட் ரமாபாய் சரஸ்வதி
3. தாராபாய் ஷிண்டே
4. பேகம் ரோகியா சகாவத் உசேன்

109. The dance performed by tribals of Araku Valley

1. Gussadi
2. Sadir
3. Kuravanji
4. Dhimsa

அரக்கு பள்ளத்தாக்கின் பழங்குடியினர் ஆடும் நடனம்

1. குசாடி
2. சதிர்
3. குறவஞ்சி
4. திம்சா

110. Collection of maps is called as

1. Map drawing
2. Map analysis
3. Study of maps
4. Atlas

நிலவரைபடங்களின் தொகுப்பை இவ்வாறு அழைப்பர்

1. நிலவரைபடம் வரைதல்
2. நிலவரைபடங்களின் பகுப்பாய்வு
3. நிலவரைபடங்களின் ஆய்வு
4. நிலவரைபட புத்தகம்

111. The Santhal Adivasis revolt was held in this period

சந்தால் ஆதிவாசிகளின் எதிர்ப்பு போராட்டம் இக் காலத்தில் நிகழ்ந்தது.

1. 1855 - 56
2. 1850 - 51
3. 1860 - 61
4. 1870 - 71

112. The birth place of Alluri Sitarama Raju is

1. Pendurthi
2. Chinthapalli
3. Pandrangi
4. Ramapachodavaram

அல்லூரி சீதாராமராஜு பிறந்த இடம்

1. பெந்துர்த்தி
2. சிந்தபள்ளி
3. பாண்ட்ரங்கி
4. ரம்பசோடவரம்

113. The fire accident occurred in 2004 in which 93 school children were died at this place

1. Bhopal
2. Mysore
3. Kumbhakonam
4. Visakhapatnam

2004 ஆம் ஆண்டில் இந்த இடத்தில் நடந்த தீவிபத்தில் 93 பள்ளிக்கூட குழந்தைகள் உயிரிழந்தனர்

1. போபால்
2. மைசூர்
3. கும்பகோணம்
4. விசாகப்பட்டினம்

114. Prohibition of child marriage Act was enacted in the year

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் இந்த ஆண்டில் இயற்றபட்டது

1. 2004
2. 2007
3. 2006
4. 2005

115. Under this right, all forms of 'forced labour' are prohibited

1. Right against exploitation
2. Right to live
3. Right to freedom
4. Right to equality

இவ்வுரிமையின்படி அனைத்து வகையான, கட்டாயபடுத்தி வேலை வாங்கும் கொத்தடிமை முறைகள் தடை செய்யப்பட்டுள்ளன

1. சுரண்டலுக்கு எதிரான உரிமை
2. உயிர் வாழும் உரிமை
3. சுதந்திர உரிமை
4. சமத்துவ உரிமை

116. The inventor of steam Engine

1. James Watt
2. Mc Adam
3. James Bindley
4. Mathew Boulten

நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர்

1. ஜேம்ஸ் வாட்
2. மெக் ஆடம்
3. ஜேம்ஸ் பிண்ட்லே
4. மேத்யூ பௌல்டன்

117. Process of equipping oneself with the knowledge and information on financial matter is,

1. Financial literacy
2. Book keeping
3. Banking
4. Accounting

ஒருவர் தன்னைதானே நிதி நிலை சம்பந்தப்பட்ட அறிவு மற்றும் தகவல்களை நன்கு பெற்று, தயாராக்கிக்கொள்ளும் முறை

1. நிதி நிலை சம்பந்தப்பட்ட தகவலறிவு
2. புத்தக பராமரிப்பு
3. வங்கியியல்
4. கணக்கிடுதல்

118. The first co-operative society in the world was established in this country.

1. England
2. America
3. France
4. Japan

உலகிலேயே முதன்முதலாக கூட்டுறவுச் சங்கம் இந்த நாட்டில் நிறுவப்பட்டது

1. இங்கிலாந்து
2. அமெரிக்கா
3. பிரான்ஸ்
4. ஜப்பான்

119. The industry which provides highest employment in India after agriculture.

1. Textile industry
2. Jute industry
3. Sugar industry
4. Iron and steel industry

இந்திய நாட்டில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகளவு வேலைவாய்ப்பை அளிக்கும் தொழிற்சாலை

1. துணி தொழிற்சாலை
2. சணல் தொழிற்சாலை
3. சர்க்கரை தொழிற்சாலை
4. இரும்பு எஃகு தொழிற்சாலை

120. Temperate grasslands are also called as

1. Tundras
2. Steppes
3. Taigas
4. Thorny bushes

மிதவெப்ப மண்டல புல்வெளி நிலங்களின் வேறு பெயர்

1. தூந்திரங்கள்
2. ஸ்டெப்பீக்கள்
3. டைகாக்கள்
4. முட்புதர்கள்

121. The steep rocky coast rising almost vertically above sea water is called as

1. Sea arches
2. Mushroom rock
3. Sea cliff
4. Inselburg

கடல்நீருக்கு மேல் பெரும்பாலும் செங்குத்தாக தோன்றும் செங்குத்து பாறைப் பாங்கான கடலோரத்தை இவ்வாறு அழைப்பர்

1. கடல் வளைவுகள்
2. காளான் பாறை
3. கடல் செங்குத்துபாறை
4. செங்குத்து பெருமலை

122. The northern most mountain range in Himalayas

1. Himadri
2. Shivalik
3. Mahabharatha ranges
4. Pir Panjal

இமயமலையின் வடக்குமுனையில் அமைந்துள்ள மலைத்தொடர்

1. ஹிமாத்ரி
2. சிவாலிக்
3. மகாபாரத மலைத்தொடர்
4. பீர் பஞ்சல்

123. The west coast of India starts from

1. Mumbai
2. Goa
3. Calicut
4. Rann of Kutch

இந்தியாவின் மேற்கு கடலோரம் துவங்கும் இடம்

1. மும்பை
2. கோவா
3. கள்ளிக்கோட்டை
4. ரான் ஆப் கச்

124. Workers work less than their potentiality is known as

1. Total unemployment
2. Under employment
3. Seasonal employment
4. Disguised unemployment

தொழிலாளர்கள் அவர்களுடைய திறமையை காட்டிலும் குறைவாக வேலை செய்வதை இவ்வாறு அழைப்பர்

1. வேலையின்மை
2. குறை வேலைவாய்ப்பு
3. பருவகால வேலைவாய்ப்பு
4. மறைமுக வேலையின்மை

125. The first census in India was taken in the year

இந்தியாவில் முதலாவது மக்கள்தொகை கணக்கெடுப்பு இந்த ஆண்டில் நடத்தப்பட்டது

1. 1852
2. 1862
3. 1872
4. 1882

126. The density of population per square kilometer in India as per census 2011

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்களடர்த்தி, (ஒரு சதுர கிலோ மீட்டருக்கு)

1. 285
2. 382
3. 385
4. 295

127. In 2013, the IPCC conference on climate change was held at

1. London
2. New York
3. Delhi
4. Warsaw

2013ஆம் ஆண்டில், காலநிலை மாற்றம் குறித்த மாநாடு நடைபெற்ற இடம்

1. லண்டன்
2. நியூயார்க்
3. டில்
4. வார்சா

128. ‘Sex ratio’ is the

1. Number of females to males in the country
2. Number of females to males in every village in a country
3. Number of females per every 100 males in cities in the country
4. Number of females per every 1000 males in the country

‘பாலின விகிதம்’ என்றால்

1. நாட்டின் மக்கள் தொகையில் உள்ள ஆண்களுக்கு, எத்தனை பெண்கள் உள்ளனர் என்பதை தெரியப்படுத்துதல்
2. நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆண்களுக்கு எத்தனை பெண்கள் உள்ளனர் என்பதை தெரியப்படுத்துதல்
3. நாட்டில் உள்ள நகரங்களில் உள்ள ஒவ்வொரு 100 ஆண்களுக்கு, எத்தனை பெண்கள் உள்ளனர் என்பதை தெரியப்படுத்துதல்
4. நாட்டின் மக்கள் தொகையில், ஒவ்வொரு 1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள் உள்ளனர் என்பதை தெரியப்படுத்துதல்

129. In 1995, the Ford Motors company started its large plant in India at

1. Chennai
2. Hyderabad
3. Bangalore
4. Trivendram

1995ஆம் ஆண்டில் போர்டு மோட்டார்ஸ் நிறுவனம், இந்தியாவில் அதனுடைய பெரிய தொழிற்சாலையை இந்த இடத்தில் நிறுவியது

1. சென்னை
2. ஐதராபாத்
3. பெங்களூர்
4. திருவனந்தபுரம்

130. The second largest city in India (Census - 2011)

1. Kolkata
2. Mumbai
3. Delhi
4. Chennai

இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய நகரம் (Census - 2011)

1. கொல்கத்தா
2. மும்பை
3. டில்லி
4. சென்னை

131. ‘Erom Sharmila’ belongs to this state

1. Manipur
2. Nagaland
3. Assom
4. Meghalaya

‘இரோம் ஷர்மிளா’ இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்

1. மணிப்பூர்
2. நாகாலாந்து
3. அசோம்
4. மேகாலயா

132. Moving away from the equator towards poles, the average annual temperature will

1. slowly increase
2. remain constant
3. be doubled
4. decrease gradually

பூமத்திய ரேகையில் இருந்து, துருவங்களை நோக்கி நகரும்போது ஆண்டு சராசரி வெப்பநிலை இவ்வரறு இருக்கும்

1. மெதுவாக அதிகரிக்கும்
2. நிலையாக இருக்கும்
3. இரண்டு மடங்காகும்
4. குறைந்து கொண்டே இருக்கும்

133. The country that is called as ‘promised land’

1. Palestine
2. Russia
3. England
4. America

**‘வாக்குறுதியளிக்கப்பட்ட நிலம்’ என்று அழைக்கப்படும் நாடு**

1. **பாலஸ்தீனம்**
2. **ரஷ்யா**
3. **இங்கிலாந்து**
4. **அமெரிக்கா**

134. Expand – ‘SEZ’

**S.E.Z. என்பதன் விரிவாக்கம்**

1. Special Economic Zone
2. Special Education Zone
3. Special Environment Zone
4. Special Enrollment Zone

135. This country was not affected by the economic depression during 1929-30

1. Germany
2. Russia
3. Japan
4. India

‘மாபெரும் பொருளாதார தேக்கநிலை’ யால் பாதிப்பு அடையாத நாடு (1929-30)

1. ஜெர்மனி
2. ரஷ்யா
3. ஜப்பான்
4. இந்தியா

136. The book ‘Silent spring’ was written by

1. James Huck
2. Adam Smith
3. Rachel Carson
4. Anil Agarwal

‘அமைதியின் வசந்தம்’ என்னும் நூலை எழுதியவர்

1. ஜேம்ஸ் ஹக்
2. ஆடம் ஸ்மித்
3. ரேச்சல் கார்ஸன்
4. அனில் அகர்வால்

137. Founder of Nazi party

1. Hitler
2. Mussolini
3. Churchill
4. Bismarck

நாஜி கட்சியை நிறுவியவர்

1. ஹிட்லர்
2. முசோலினி
3. சர்ச்சில்
4. பிஸ்மார்க்

138. The first elections to Loksabha were conducted in the year

முதலாவது லோக்சபை பொதுத் தேர்தல்கள் நடந்த ஆண்டு

1. 1951 - 52
2. 1952 - 53
3. 1954 - 55
4. 1947 - 48

139. ‘Preservation of Customs and Traditions’ and ‘equality’ are the illustrations of these kinds of values respectively

1. Disciplinary value, Cultural value
2. Cultural value, Democratic value
3. Social value, Moral value
4. Moral value, Political value

கலாச்சார மரபுகள் மற்றும் வழக்கங்களின் பாதுகாப்பு மற்றும் சமத்துவம் என்பவை வரிசையாக இவ்வகையான மதிப்புகளைச் சாரும்

1. ஒழுக்க மதிப்பு, கலாச்சார மதிப்பு
2. கலாச்சார மதிப்பு, மக்களாட்சி மதிப்பு
3. சமூக மதிப்பு, அறநெறி மதிப்பு
4. அறநெறி மதிப்பு, அரசியல் மதிப்பு

140. ‘Developing a pamphlet on Clean and Green’ and ‘Respect for National Symbols’ are the specification of these objectives

1. Interest, Attitude
2. Knowledge, Application
3. Application, Skill
4. Creativity, Understanding

“தூய்மையும் பசுமையும்” மீதான கையேட்டினை மேம்படுத்துதல் மற்றும் தேசியச் சின்னங்களை மதித்தல் என்பவை இந்த நோக்கங்களின் சிறப்புக் கூறுகள்

1. ஆர்வம், மனப்பான்மை
2. அறிவு, பயன்பாடு
3. பயன்பாடு, திறன்
4. ஆக்கத்திறன், புரிந்துகொள்ளுதல்

141. A student is able to prepare an album making use of various data sources like news papers, periodicals and other library material etc. This is related to this objective

1. Appreciation
2. Knowledge
3. Skill
4. Understanding

ஒரு மாணவன் பல்வேறு புள்ளி விவர வளங்களான செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், பிற நூலகக் கருவிகள் போன்றவற்றை பயன்படுத்தி ஆல்பம் தயாரிக்கும் திறன் இவ்வகையான கற்பித்தல் நோக்கத்துடன் தொடர்புடையது

1. பாராட்டுதல்
2. அறிவு
3. திறன்
4. புரிந்துகொள்ளுதல்

142. Under the section 29 (2) (a) of RTE Act-2009, while laying down the curriculum, the academic authority shall take into consideration of the following

1. All round development of the child
2. Building up child's knowledge, potentiality and talent
3. Conformity with the values enshrined in the constitution
4. Development of physical and mental abilities of the child to the fullest extent

கல்வி உரிமைச் சட்டம்–2009 பிரிவு 29(2)(a)வின் கீழ் கல்வி ஆணையம் கலைத்திட்டத்தை வடிவமைக்கும் போது கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய கூறு

1. குழந்தையின் அனைத்துமுக வளர்ச்சி
2. குழந்தையின் அறிவு, திறமைகள், திறன்களை வளர்த்தல்
3. அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட மதிப்புகளுக்கு ஏற்ப இருத்தல்
4. குழந்தைகளின் முழுத்திறமையின் அடிப்படையில் உடல், மன ஆற்றல்களை வளர்த்தல்

143. National curriculum Frame Work (NCF) – 2005 suggested this,

1. The term sociology should be used in place of Social Science
2. The term Social Science should be used in place of Sociology
3. The term Civics should be used in place of Political Science
4. The term Political Science should be used in place of Civics

தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு 2005 (NCF 2005) கீழ்க்காணும் ஒரு அறிவுரையை வழங்கியது

1. சமூக அறிவியல் என்பதற்குப் பதிலாக சமுதாயவியல் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
2. சமுதாயவியல் என்னும் சொல்ற்குப் பதிலாக சமூக அறிவியல் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
3. அரசியல் அறிவியல் என்பதற்குப் பதிலாக குடிமையியல் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
4. குடிமையியல் என்பதற்குப் பதிலாக அரசியல் அறிவியல் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

144. One of the following statement is not true

1. Curriculum provides a base for a course of study
2. Curriculum is the part of syllabus
3. Syllabus includes the content of what is to be taught
4. Curriculum is the plan for the implementation of educational aims

கீழ்க்காணும் வாக்கியங்களில் உண்மையல்லாதது

1. கலைத் திட்டமானது ஒரு பயிற்சியை பயில்வதற்கு ஓர் அடிப்படையை வழங்குகிறது
2. கலைத்திட்டம் என்பது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்
3. பாடத்திட்டத்தில் நாம் கற்பிக்கவிருக்கும் பாடப் பொருள் அடங்கும்
4. கலைத்திட்டம் என்பது கல்விக் குறிக்கோள்களைச் செயல்முறைப்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும்

145. A Social Studies teacher organized field trip to Talakona Water falls to 9th class students. It comes under this kind of learning experience

1. Direct experience
2. Indirect experience
3. Vicarious experience
4. Both direct and indirect experiences

ஒரு சமூக அறிவியல் ஆசிரியர் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களை தலைக்கோணை நீர்வீழ்ச்சிக்கு களப் பயணம் ஏற்பாடு செய்தார் என்பது இவ்வகையான கற்றல் அனுபவத்தின் கீழ் வரும்

1. நேரடி அனுபவம்
2. மறைமுக அனுபவம்
3. பிறருக்காக செய்கின்ற அனுபவம்
4. நேரடி மற்றும் மறைமுக அனுபவங்கள்

146. "Learning without Burden" – recommended by

1. Kothari Commission
2. Prof. Yashpal Committee
3. Secondary Education Commission
4. NPE – 1986

'சுமையில்லாமல்' கற்றல் என்பதைப் பரிந்துரைத்த குழு

1. கோத்தாரிக் குழு
2. பேராசிரியர் யஷ்பால் குழு
3. இடைநிலைக் கல்விக் குழு
4. NPE – 1986

147. Social learning and discovery learning are respectively related to

1. Albert Bandura, Piaget
2. Jerome Bruner, John Dewey
3. Jerome Bruner, Albert Bandura
4. Albert Bandura, Jerome Bruner

சமுதாயக் கற்றல், கண்டுபிடிப்புக் கற்றல் என்பவை முறையே இவர்களுடன் தொடர்புடையது.

1. ஆல்பர்ட் பண்டூரா, பியாஜே
2. ஜெரோம் புரூனர், ஜான் டூயி
3. ஜெரோம் புரூனர், ஆல்பர்ட் பண்டூரா
4. ஆல்பர்ட் பண்டூரா, ஜெரோம் புரூனர்

148. One of the following is related to collaborative learning

1. Doing homework
2. Learning through exploration
3. Solitary play
4. Watching T.V.

கீழ்க்கண்டவற்றில் குழு ஈடுபாட்டுக் கற்றலுடன் தொடர்புடையது

1. வீட்டுப் பணி செய்தல்
2. ஆய்வு மூலம் கற்றல்
3. தனித்து விளையாடுதல்
4. தொலைக்காட்சியைப் பார்த்தல்

149. Which of the following statements are true

A. Both the terms 'Test' and 'Measurement' are synonyms

B. There is a difference between Test and Measurement

C. When the work of testing ends, measurement comes into picture for assessing numerical values to the results

Choose the correct option

1. A, B & C
2. A & C only
3. B & C only
4. A & B only

கீழ்க்காணும் கூற்றுகளில் உண்மையானவை எவை?

A. சோதனை மற்றும் அளவீடு என்னும் சொற்கள் ஒரே பொருளையுடைய சொற்கள்.

B. சோதனைக்கும் அளவீட்டிற்கும் வேறுபாடு உள்ளது.

C. சோதனையின் பணி முடிந்தபின் அளவீடு திரைக்கு வருகிறது. அளவீடு என்பது முடிவுகளுக்கு எண்கள் அடிப்படையிலான மதிப்புகளின் வடிவில் உள்ளது.

1. A, B மற்றும் C
2. A மற்றும் C மட்டும்
3. B மற்றும் C மட்டும்
4. A மற்றும் B மட்டும்

150. ‘Gurudwara’ and ‘Brick Kilns’ are respectively

1. Historical resources, Economic resources
2. Economic resources, Historical resources
3. Both Historical resources
4. Both Economic resources

குருத்வாரா மற்றும் செங்கல் சூளைகள் முறையே

1. வரலாற்று வளங்கள், பொருளாதார வளங்கள்
2. பொருளாதார வளங்கள், வரலாற்று வளங்கள்
3. இரண்டும் வரலாற்று வளங்கள்
4. இரண்டும் பொருளாதார வளங்கள்